## October 5, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவின ரோந்து கப்பல் 'அக்ஷர்' நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
   i. புதுவை யூனியன் பிரதேசத்துக்குட்பட்ட காரைக்கால் அருகே நிரவி பகுதியில் இந்திய கடலோரக் காவல் படையின் மையம் இயங்கி வருகிறது. கடலோரக் காவல் படைக்குச் சொந்தமான ரோந்து கப்பல், படகுகள் இயக்கு தளமாக காரைக்கால் தனியார் துறைமுகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
   ii. இந்திய கடலோரக் காவல்படையின் மேம்பாட்டுக்கு 'அக்ஷர்' பெரிதும் உதவும். 60 சதவீதம் உள்நாட்டு பொருள்கள் உதவியுடன் கோவா கப்பல் கட்டுமானத் தளத்தில் கப்பல் தயாரிக்கப்பட்டுள்ளது.
   iii. ரோந்து கப்பல் சிறப்பம்சங்கள்: அக்ஷர் ரோந்து கப்பல் 51 மீட்டர் நீளமுடையது. 'மேக் இன் இந்தியா' திட்டத்தில் பெருமளவு உள்நாட்டு பொருள்கள் மூலம் கட்டப்பட்டுள்ளது. 320 டன் எடை கொண்டது.
   iv. 3,000 கேடபிள்யூ திறனுள்ள 2 டீசல் என்ஜின் பொருத் தப்பட்டுள்ளன. மணிக்கு 27 கடல் மைல் வேகத்தில் இயங்கக் கூடியது. 30 எம்எம் சிஆர்என்-91 துப்பாக்கிகள், ரிமோட் மூலம் இயக்கப்படக்கூடிய இயந்திர துப்பாக்கிகள் (மெஷின் கன்), தானியங்கி மின் சாதனங்கள் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.
2. ஜப்பானின் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் (எல்டிபி) தலைவராக பொருளாதார மற்றும் பாதுகாப்புத் துறை முன்னாள் அமைச்சரான சனே தகாய்ச்சி (64) தேர்ந் தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் முதல் பெண் பிரதமராக அவர் பதவி யேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   i. பழைமைவாதியான அவர், முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபேயின் பழைமைவாத கருத்துகளை ஆதரிப்பவர். ஜப்பானின் போர்க்கால ராணுவ வாதத்தின் சின்னமாகக் கருதப்படும் சர்ச்சைக்குரிய யசுகுனி ஆலயத்திற்கு அடிக்கடி செல்பவர். பிரதமர் ஆனதற்குப் பிறகும் அவர் இதைத் தொடர்ந்தால், வரலாற்று ரீதியில் ஜப்பான் ராணுவத்தால் பாதிக்கப்பட்ட ஆசிய அண்டை நாடுகளுடனான உறவை அது சிக்கலாக்கலாம் என்று கூறப்படுகிறது.
3. தமிழ்நாட்டைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களான திருப்பூர் குமரன், சுப்பிரமணிய சிவா ஆகியோரின் பிறந்த தினத்தையொட்டி, அவர்களுக்கு பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார்.
   i. திருப்பூர் குமரன், தன் இறுதி மூச்சு உள்ளவரை தேசியக் கொடியை ஏந்தி உயிர் தியாகம் செய்தார். இதன் மூலம் அசாத்தியமான துணிச்சலையும், தன்னலமற்ற தியாகத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.
   ii. சுப்பிர மணிய சிவா, தமது துணிச்சலான எழுத்து மற்றும் அனல் பறக்கும் பேச்சின் மூலம் எண்ணற்ற இளைஞர்கள் இடையே கலாசார பெருமிதத்தையும், தேசப்பற்றையும் விதைத்தார்.
4. அக்.8-ஆம் தேதி பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் இந்தியா வரவுள்ளார். கடந்த ஆண்டு ஜூலையில் அவர் பிரதமராகப் பதவியேற்றபின், முதல்முறையாக இந்தியாவுக்கு வருகை தரவுள்ளார்.
   i. அக்.9-ஆம் தேதி மும்பையில் இந்தியா-பிரிட்டன் இடையிலான விரிவான உத்திசார்ந்த கூட்டுறவின் பலவித அம்சங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இரு பிரதமர்களும் ஆய்வு செய்ய வுள்ளனர்.
   ii. இந்தியா-பிரிட்டன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

5. பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கேயை இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி சந்தித்து இருநாட்டு உறவுகள் குறித்துப் பேசினார்.
   i. இந்தியா-பூடான் இடையே ரயில் பாதை அமைக்க அண்மையில் இருநாட்டு அரசுகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது. இதைத் தொடர்ந்து அந்நாட்டுக்கு விக்ரம் மிஸ்ரி சென்றார்.
   ii. அங்கு அவர் பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கியால் வாங்கக், பிரதமர் ஷெரிங் டோப்கே, வெளியுறவு அமைச்சர் டி.என்.துங்க்யெல் ஆகியோரைச் சந்தித்ததாக அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டது.
6. நாட்டில் உள்ள தொழிற்கல்வி நிலையங்கள் (ஐடிஐ) தொழில் துறை கல்விக்கான முக்கிய மையங்கள் மட்டுமல்ல; தற்சார்பு இந்தி யாவுக்கான பயிற்சியகங்கள்' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
   i. நாடு முழுவதும் ரூ.60,000 கோடி மதிப்பீட்டில் 1,000 அரசு ஐடிஐ-க்களை அதிநவீன அம்சங்களுடன் மேம்படுத்தும் 'பிஎம்-சேது' (மேம்படுத்தப் பட்ட ஐடிஐ-கள் மூலம் பிரதமரின் திற னளிப்பு மற்றும் வேலைவாய்ப்பு தகுதி மேம்பாடு) திட்டத்தை தொடங்கி வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
7. காஸாவின் ஹமாஸ் - இஸ்ரேல் ராணுவம் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில், வெள்ளை மாளிகையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்னர் அவரது முன்னிலையில் 20 அம்ச அமைதித் திட்டத்தை டிரம்ப் அறிவித்தார்.
   i. இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிப்பது உள்ளிட்ட அமெரிக்க அதிபர் டிரம்ப் முன்வைத்த அமைதித் திட்டத்தின் சில பகுதிகளை ஏற்க ஹமாஸ் ஒப்புக்கொண்டது.
   ii. இதையடுத்து, காஸாவில் தாக்குதலை நிறுத்தும்படி இஸ்ரேலுக்கு டிரம்ப் உத்தரவிட்டார்.
   iii. இதன்மூலம் 2023, அக். 7-ஆம் தேதிமுதல் நடைபெற்று வரும் இந்தப் போர் முடிவுக்கு வருமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.
   iv. டிரம்ப் முன்மொழிந்த அமைதித் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.